**பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தங்கள் மத்திய கண்காணிப்பு ஆணையம், தமிழ்நாடு ஒப்ப ஒளிவு மறைவுற்ற விதிகள், உலக வங்கி வழிகாட்டுதல் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் தகுதியான ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படுகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தங்கள் மத்திய கண்காணிப்பு ஆணையம், தமிழ்நாடு ஒப்ப ஒளிவு மறைவுற்ற விதிகள், உலக வங்கி வழிகாட்டுதல் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் தகுதியான ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படுகிறது என இன்று (15.12.2018) ரிப்பன் மாளிகை வளாகத்தில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆணையாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மத்திய அரசின் JnNURM திட்டத்தின் கீழ் 2009ம் ஆண்டில் சென்னை மாநகரின் நான்கு வடிநிலப்பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளுக்கு ஒப்பங்கள் கோரப்பட்டது. அதில் ஒப்பங்கள் ரூ.20 கோடியிலிருந்து ரூ.100 கோடி மதிப்பீட்டில் சிப்பங்களாக கோரப்பட்டு, பணி மேற்கொள்ள சிறந்த உபகரணங்கள் வைத்துள்ள ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் வகையில் ஒப்பத் தகுதிகள் வகுக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

உலக வங்கி நிதியின் கீழ் துவக்கப்பட்ட ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு ரூ.20 கோடி முதல் ரூ.60 கோடி மதிப்பீட்டில் சிப்பங்கள் பிரிக்கப்பட்டு 2015ம் ஆண்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டு, பணி மேற்கொள்ள தகுந்த உபகரணங்கள் வைத்துள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பங்கள் வழங்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது.

இதையடுத்து நடுத்தர ஒப்பந்ததாரர்கள் அரசிற்கும், சென்னை மாநகராட்சிக்கும் கோரிக்கை வைத்து இந்த ஒப்பத் தகுதியை (Bid Capacity). குறைக்குமாறும், உபகரணங்களின் தகுதித் திறனை குறைத்து ஒப்பம் கோரினால் தாங்களும் பங்குபெற முடியும் என்று கோரிக்கை விடுத்ததால் உலக வங்கி ஒப்புதலுடனும், அரசாங்கத்தின் அனுமதியுடனும் நான்கு கால்வாய் பணிகளுக்கான சிப்பங்களை பணிகள் விரைந்து முடித்து மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.5 கோடி அளவில் 29 சிறு சிப்பங்களாக பிரித்து, அதிகமான ஒப்பந்ததாரர்கள் கலந்து கொள்ளும் வகையில் ஒப்பங்கள் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

மேலும் பல ஒப்பந்ததாரர்கள் கோரியதால் இந்த ஒப்பத் தகுதி மேலும் குறைக்கப்பட்டு நடப்பு ஆண்டு முதல் பெருநகர சென்னை வளர்ச்சித் திட்ட நிதியின் (CMCDM) கீழ் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகளுக்கான ஒப்பங்கள், 73 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ரூ.1.33 கோடியிலிருந்து ரூ.7.95 கோடி மதிப்பீட்டில் பணிகள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 40 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

சீர்மிகு நகரத் திட்ட நிதியின் கீழ் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகளுக்காக ஒப்பங்கள், 36 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, ரூ.1.27 கோடியிலிருந்து ரூ.6.77 கோடி வரை மதிப்பிலான கோரப்பட்ட இந்த ஒப்பமானது 11.11.2018 அன்று கோரப்பட்டு 31.12.2018 அன்று திறப்பதாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. இத்தருணத்தில் மேலும் சிறிய ஒப்பந்ததாரர்கள் இந்த ஒப்பத்தில் சிறிய அளவிலான பணிகளும் இருப்பதால் தாங்கள் ஒப்பத்தில் கலந்து கொள்வதற்கு ஏதுவாகவும் பணிகள் விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பெறும் வகையிலும், ஒப்பந்த தகுதியை குறைக்க பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டதால் 36 சிப்பங்களை மேலும் அதிகப்படுத்தும் வகையில் இந்த ஒப்பங்கள் இரத்து செய்யப்பட்டு, சிறு ஒப்பங்நதாரர்களும் பங்கேற்கும் வகையில் சிறிய சிப்பங்களாக மாற்றப்பட்டு கூடுதலான சிப்பங்களுடன் இதற்கான ஒப்பங்கள் கோரப்படவுள்ளது. இதனால் பல இடங்களில் ஒரே நேரத்தில் பணிகள் விரைந்து நடைபெற்று, சீர் மிகு நிதியும் 2019ற்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக செலவிடப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து சாலைகள் அனைத்தும் உயர் தரத்துடன் நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்டுவருகின்றன. சுமார் 300 கோடி மதிப்பிலான சாலை அமைக்கும் பணிகள் பருவமழை காலம் முடிந்தவுடன் துவங்கப்படவுள்ளது. இச்சாலைப் பணிகளை தொடக்க முதல் முடியும் வரை கண்காணிக்கவும், தரத்தினை உறுதி செய்யவும் திட்ட மேலாண்மை கலந்தாலுநர் (Project Management Consultant) நியமித்து அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சாலையின் உயரம் அதிகமாகாமல் இருக்க அனைத்து சாலைகளிலும் நவீன மில்லிங் இயந்திரம் கொண்டு சாலையினை அகழ்ந்தெடுத்து சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சாலைகள் சாய்தளம் (CAMBER) மற்றும் பி.சி. ஆகிய அடுக்குகளாக அமைக்கப்படுகிறது.

அனைத்து பேருந்து தட சாலைகளும் 9 மீட்டர் (30 அடி) அகலம் கொண்ட எலக்ட்ரானிக் சென்சார் பேவர் இயந்திரம் மூலம் அமைக்கப்படுவதால் சாலைகளின் மேற்பரப்பு சீராகவும், வாகன போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமைகிறது. அனைத்து சாலைகளும் 5 அடுக்கு தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

அனைத்து பேருந்து தட சாலைகளிலும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக தெர்மோ பிளாஸ்டிக் வண்ணக்கோடுகளும், இரவில் மிளிரும் மிளிர்வான்களும் (studs) அமைக்கப்படுகின்றன. மேலும், மரங்களை சுற்றிலும் மழைநீர் செல்லும் வகையில் கான்கிரீட் ஜாலிகள், சாலைகளில் மழைநீர் தோங்காவண்ணம் சாலைகளின் இரு ஓரங்களிலும் நீர் தடம் (water table) அமைத்தல், வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைத்தல் போன்ற போக்குவரத்து மேம்பாட்டு பணிகளும் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் கடந்த 100 ஆண்டுகளில் சென்னை மாநகர் கண்டிராத அளவில் 2015ம் ஆண்டு ஏற்பட்ட வடகிழக்கு பருவமழை மற்றும் வெள்ளத்திலும் சேதமடையவில்லை. இச்சாலைகள் வர்தா புயலிலும் 2016 மற்றும் 2017ஆம் ஆண்டு பருவகால கனமழையிலும் எவ்வித சேதமும் அடையாமல் உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த முறையில் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு இதுவே சான்றாகும். இவ்வாறு தரமான சாலைகள் அமைக்கப்பட்டதால் கடந்த மூன்று ஆண்டுகளில் சாலைகளில் ஒட்டு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும், சாலை போக்குவரத்து துறையின் சார்பில் கோரப்படும் ஒப்பங்கள் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் அரசாணையின்படி 2008ம் ஆண்டு முதல் ரூ.25.00 கோடி மதிப்புடைய சிப்பங்களாக ஒப்பம் கோருவதற்கு அரசாணை வெளியிடப்பட்டதன் அடிப்படையிலேயே கோரப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, துணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.என்.மகேசன், மாநகர நல அலுவலர் மரு.என்.எ.செந்தில்நாதன் மற்றும் மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால்) திரு.எல்.நந்தகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்.